

சென்னை, கிண்டியிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கூட்டரங்கில், நேற்று (07.10.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள, சென்னை பெருநகரம், தாம்பரம், ஆவடி ஆகிய மாநகராட்சிகளில் நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சாலைகளின் நிலைபாடு குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தினார். இந்த ஆய்வுக்கூட்டத்தில், முனைவர்.ஆர்.செல்வராஜ், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறை முகங்கள் துறை, ஆர்.செல்வதுரை, நெடுஞ்சாலைத்துறை, முதன்மை இயக்குநர், கே.ஜி.சத்தியபிரகாஷ், தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, எம்.சரவணன், இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், எஸ்.பழனிவேல், தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம், இரா.சந்திரசேகர், சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்), கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப்பொறியாளர்கள் மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர்கள் / உதவிப் பொறியாளர்கள் மற்றும் துறைச் சார்ந்த அனைத்து அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் வீரபாண்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டி மாணவ – மாணவியர்களுக்கு வடக்கு மாவட்ட செயலாளர் தங்கத்தமிழ் செல்வன் எம்.பி. வழங்கினார். உடன் வீரபாண்டிபேரூராட்சி தலைவர் கீதாசசி மற்றும் கழக முன்னோடிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### பருவமழை: நெடுஞ்சாலைத் துறையினால்

# பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் இருக்கக் கூடாது!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

சென்னை, அக். 8 -

சென்னை, தாம்பரம், ஆவடி மாநகராட்சிகளிலுள்ள நெடுஞ்சாலைத் துறை சாலைகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (07.10.2024) கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய பயிற்சி மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் அவர்களின் தொடக்கவுரையில் வடகிழக்கு பருவமழை விரைவில் துவங்கும் என வானிலை மையம் அறிவுறுத்தியுள்ளது. வங்க கடலில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுதால் தற்போது சில மாவட்டங்களிலும் சென்னையிலும் மழை பெய்து வருகிறது என்பதை குறிப்பிட்டு அமைச்சர் அவர்கள் கால்வாய்கள் தூர்வாரும் பணிகள் எந்தெந்த பகுதிகளில் நிறைவடைந்துள்ளது என்பதை கேட்டறிந்தார். தற்போதுள்ள நிலையான அறிவுரைகளின்படி சிறுபாலங்கள், வடிநீர்கால்வாய்கள், நீர் வழிப்பாதைகள் ஆகியவை எந்தெந்த இடங்களில் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் சுத்தம் செய்யப்படாத பகுதிகளை உடனே சுத்தம் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

பல்லாவரம், துரைப்பாக்கம் மற்றும் பழைய மகாபலிபுரம் சாலையும் கிழக்கு கடற்கரை சாலையும் இணைக்கும் சாலைகளில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மறைமலை அடிகளார் பாலம் இரும்புலியூர், வண்டலூர், முடிச்சூர், வாலாஜாபாத் சாலை மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியில் நிறைவுற்ற பணிகள், எஞ்சியுள்ள பணிகள் குறித்து ஆய்வு செய்து விரைவாக அனைத்துப் பணிகளையும் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

சாலைகளில் தோண்டப்படும் பள்ளங்களில் நான்கு பக்கமும் தடுப்புகள் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பருவ மழையின் போது சுரங்கப்பாதையில் (Subway) உள்ள இடங்களில் நீர்இறைக்கும் இயந்திரங்கள்,எரிபொருள், ஜெனரேட்டர் போன்ற உபகரணங்கள் உரிய பராமரிப்பு செய்து தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும். என்றும்

உடனடியாக தேவைப்படும் மின் மோட்டார், மற்றும் வாகனங்கள் (JCB, Lorry etc.,) போன்றவை தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும். என்றும்வெள்ள சேத தடுப்பு பணிகளுக்கு தேவைப்படும் மணல் மூட்டைகள், சவுக்கு கம்பங்கள் உள்ளிட்ட பொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும். என்றும் பொது மக்களுக்கு எந்தவித அசௌகரியங்களும் இல்லாதவாறு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

துறையிலுள்ள பணியாட்களை தவிர தேவைப்படும் இதர ஆட்களை ஏற்பாடு செய்து தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும்.

இயற்கை பேரிடர் காலங்களில் விழுந்த மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

அவசர காலங்களுக்கு உதவக் கூடிய ஒப்பந்ததாரர்களை கண்டறிந்து அவர்களின் தொலைப்பேசி எண்கள் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.

சேதம் பற்றிய விவரங்களை உடனடியாக தலைமையிடத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

பேரிடர் காலங்களில் உதவக் கூடிய மருத்துவமனைகள், மற்றும் அவசர உதவி நிறுவனங்கள், உள்ள சாலைகளில் சிறப்பு கவனம் செலுத்தி நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

வடகிழக்கு பருவ மழை என்பது உறுதி செய்யப்பட்டது. மழையின் காரணமாக பொதுமக்களுக்கு நெடுஞ்சாலைத்துறையால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

தாம்பரம், சோமங்கலம் நந்தம்பாக்கம் சாலையில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி விரைவாக முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

சென்னை, ஆவடி மற்றும் தாம்பரம் மாநகராட்சிப் பகுதியில் உள்ள நெடுஞ்சாலைத்துறையின் சாலைகளில் நடைபெறும் பணிகள் குறித்து ஒன்றன்பின் ஒன்றாக ஆய்வு செய்து பொறியாளருக்கு தக்க அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் முனைவர்.ஆர்.செல்வராஜ், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, ஆர்.செல்வ துரை, நெடுஞ்சாலைத்துறை, முதன்மை இயக்குநர், கே.ஜி.சத்தியபிரகாஷ், தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, எம்.சரவணன், இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், எஸ்.பழனிவேல், தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம், இரா.சந்திரசேகர், சிறப்பு அலுவலர் (தொழில் நுட்பம்), கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர்கள் / உதவிப் பொறியாளர்கள் மற்றும் துறைச் சார்ந்த அனைத்து அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் சிறப்பு முகாம்!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் அறிக்கை!



கன்னியாகுமரி, அக். 8 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழ்நாட்டில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கன்னியாகுமரி, நாகர்கோவில் மற்றும் குளச்சல் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளிலும் 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும், பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 09.11.2024 (சனிக்கிழமை), 10.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), 23.11.2024 (சனிக்கிழமை), 24.11.2024 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய 4 நாட்கள் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது. இறுதி வாக்காளர் பட்டியல் 06.01.2025 அன்று வெளியிடப்படும். அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது விபரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், இதுவரை இடம்பெறாத பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள பட்டியலிலிருந்து நீக்கவும், 01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, ஆதார் எண்ணை இணைக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் ஒப்படைக்க வேண்டும்.

இந்த சிறப்பு முகாம்களில், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்கள் (BLCs) ஆகியோர் இணைந்து இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தங்கள், முகவரி மாற்றம் செய்தல், ஆதார் எண்ணை வாக்காளர் பட்டியலுடன் இணைத்தல் போன்ற பணிகளை சிறப்பாக மேற்கொண்டு தகுதியுள்ள வாக்காளர்களை விடுபட்டுவிடாமல் இணைக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA 2), வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்கள் (BLCs) ஆகியோர் இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்ற தேர்தல் முடியும் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுடன் (BLO) இணைந்து இப்பணிகளை கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நெல்லை மண்டலம் - 23 வது வார்டில் பொதுமக்கள் குறைகள்!

## மேயர் கோ.ராமகிருஷ்ணன் கேட்டறிந்தார்!

நெல்லை, அக். 8 -

நெல்லை மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன் நெல்லை மண்டலம் 23 ஆவது வார்டு பகுதிகளில் பொது மக்களை சந்தித்து குறைகளை கேட்டு அறிந்தும்,கழிவு நீர் ஓடைகளில் மண் அகற்றும் பணியினையும்,11தெருக்களில் துப்புரவு பணிகளை நேரில் பார்வையிட்டும் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது பொது மக்களின் அடிப்படை பணிகளையும் மேற்கொள்ள அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பருவ மழை முன்னெச்சரிக்கை கருத்தில் கொண்டும் சுகாதாரத்தை பேணி பாதுகாக்கும் வகையில் மழை காலங்களில் ஓடைகளில் கழிவு நீர் தேங்கி நிற்காமல் இருக்க பொதுமக்களின் நலன் கருதி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் தினசரி பல்வேறு பகுதிகளுக்கு சைக்கிளில் சென்று துப்புரவு பணிகளை தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறார்.

அதன்படி நெல்லை மண்டலம் 25 வது வார்டில் வெள்ளந்தாங்கி பிள்ளையார் கோயில் தெரு,தொட்டிபால தெரு, நபிகள் நாயகம் தெரு,வீரவாஞ்சிநாதன் தெரு,பாட்டபத்து,ஒட்டக்கூத்தர் தெரு, தேவிபுரம்,எண்ணாயிரம் பிள்ளையார் கோயில் தெரு,கான்மியான் பள்ளிவாசல் தெரு, முகம்மது அலி தெரு, வழுக்கோடை மெயின் ரோடு ஆகிய பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்தார்.கழிவுநீர் ஓடைகளில் மண் அகற்றும் பணியினை பார்வையிட்டார்.

மேலும் அடிப்படை வசதிகளான புதிய கழிவுநீர் ஓடை அமைத்தல்,புதிய தெரு விளக்குகள் அமைத்தல்,சாலை வசதிகள்,கல்வெட்டு பாலம் அமைத்தல், பொது கழிப்பறை சுத்தப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.இந்த ஆய்வின் போது நெல்லை பகுதி கழக துணை செயலாளர் அப்துல் சுபஹானி, சுகாதார ஆய்வாளர் பெருமாள், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, வட்ட கழக பிரதிநிதி ஷேக் பிள்ளை, உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### சட்டப் பேரவைத் தேர்தல்:

# ஜம்மு - காஷ்மீர் - அரியானாவில் இன்று வாக்கு எண்ணிக்கை!

ஸ்ரீநகர், அக். 8 -

90 தொகுதிகளைக் கொண்ட ஜம்மு - காஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்கு செப்டம்பர் 18, 25, அக்டோபர் 1 ஆகிய தேதிகளில் 3 கட்டங்களாக சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது.

அதில், 63.4 சதவீத வாக்குகள் பதிவாகின. தேர்தலுக்குப் பிறகு, காங்கிரஸ் மற்றும் தேசிய மாநாட்டுக் கட்சி கூட்டணி ஆட்சி அமைக்கும் என பல்வேறு நிறுவனங்கள் நடத்திய கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 90 தொகுதிகளைக் கொண்ட அரியானா மாநிலத்தில், ஒரே கட்டமாக நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் 67 சதவீத வாக்குகள் பதிவாகின.

இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடிக்கும் என தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பு முடிவில் தெரிய வந்தது.

இந்த நிலையில், ஜம்மு - காஷ்மீர் மற்றும் அரியானாவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.



நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் நெல்லை மண்டலம் 23வது வார்டில் வெள்ளந்தாங்கி பிள்ளையார் கோவில் தெரு,தொட்டி பாலத்தெரு,நபிகள் நாயகம் தெரு,வீரவாஞ்சிநாதன் தெரு பாட்டபத்து,ஒட்டக்கூத்தர் தெரு, தேவிபுரம்,எண்ணாயிரம் பிள்ளையார் கோவில் தெரு கான்மியான் பள்ளிவாசல் தெரு, முகமது அலி தெரு,வழுக்கோடை மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் சைக்கிளில் சென்று துப்புரவுப் பணிகளை ஆய்வு மேற்கொண்டும்,கழிவுநீர் ஓடை மண் அகற்றும் பணியினையும் பார்வையிட்டார்.பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். ஆய்வின்போது நெல்லை பகுதி கழக துணைச் செயலாளர் அப்துல் சுபஹானி, சுகாதார ஆய்வாளர் பெருமாள் மாவட்ட தகவல் தொழில்நுட்ப துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, வட்டக் கழக பிரதிநிதி சேக் பிள்ளை ஆகியோர் உடன் இருந்தனர்.

# கருநாடக மாநில தி.மு.க. சார்பில் விருதுகள் அறிவிப்பு!

## மாநில அமைப்பாளர் நா.இராமசாமி அறிக்கை!

பெங்களூரு, அக். 8-

கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந.இராமசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல் வாழ்த்துக்களுடன் கருநாடக மாநில தி.மு.க. சார்பில் நடைபெறும் கழக பவள விழா முப்பெரும் விழா வில் 2024ஆம் ஆண்டுக்கான விருதுகள் பெறுவோர் அறிவிப்பு வருமாறு:-

பெரியார் விருது திருமதி. வெண்ணிலா கதிரவன், அண்ணா விருது கே.எஸ். சுந்தரேசன், கலைஞர் விருது, தங்கவயல் பொன் சாரங்கபாணி, பேராசிரியர் விருது ஏ.டி. ஆனந்தராஜ், மு.க. ஸ்டாலின் விருது, தங்கவயல் கு.ஆதித்தன், முரசொலி மாறன் விருது, க. நாராயணசாமி, உதயநிதி ஸ்டாலின் விருது, எம். முருகானந்தம் ஆகியோர் விருது பெறுகின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




கழக மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராக பொறுப்பேற்றுக்கொண்டதை முன்னிட்டு தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் பிறந்தநாள் முன்னிட்டும் தேனி வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பாக வடக்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் மருத்துவர் சுகன்யா ஏற்பாட்டில் போடி கட்டபொம்மன் சிலை அருகில் ரத்த தான முகாம் நடைபெற்றது. போடி நகர செயலாளர் புருஷோத்தமன் துவக்கி வைத்தார். உடன் நகர மன்ற தலைவர் ராஜேஸ்வரி சங்கர் நகர மன்ற துணைத் தலைவர் கிருஷ்ணவேணி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.